செய்தி வெளியீடு எண்:774 நாள்: 14.11.2017

<u>செய்தி வெளியீடு</u>

இன்று (14.11.2017) சென்னை, தலைமைச் செயலகம், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அலுவலகத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக நிர்வாக இயக்குநர், உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர், அவர்களுடன் பொது விநியோகத் திட்டம் தொடர்பான கலந்தாய்வுக்கூட்டம், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு இரா.காமராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பொது விநியோக திட்டத்தினை முழு கணினி மயமாக்கும் திட்டத்தின் கீழ் 01.04.2017 முதல் மின்னனு குடும்ப அட்டை வழங்கப்பட்டு வருகிறது. 1.93 கோடி குடும்ப அட்டைகளில் இதுவரை 1.71 கோடி குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. பொது விநியோக திட்டத்தின் மொத்த பயனாளிகள் 6,74,74,478. ஆதார் எண்களை குடும்ப அட்டையுடன் இணைக்காத குடும்ப உறுப்பினர் விவரங்களை பெறுவதற்காக அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டு, தற்போது அந்தந்த மாவட்டங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை மின்னனு குடும்ப அட்டை கிடைக்கப் பெறாதவர்கள், உடன் வட்ட வழங்கல் அலுவலர்கள் / மாவட்ட வழங்கல் அலுவலர்கள் / உதவி ஆணையாளர்கள் மற்றும் துணை ஆணையாளர்களை அணுகி உரிய ஆவணங்களை

வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை வழங்கப்பட்டுள்ள மின்னணு குடும்ப அட்டைகள் போக மீதமுள்ள 22 இலட்சம் குடும்ப அட்டைகளில் புகைப்படம் மற்றும் திருத்தங்கள் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. 15.12.2017க்குள் அனைத்து குடும்ப அட்டைகளும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், அனைத்து பொது விநியோக கிடங்குகளிலும் அத்தியாவசியப் பொருட்கள் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. அதிக மழைப் பொழிவு போன்ற நிலை ஏற்பட்டாலும் அதனை சமாளிக்கும் வகையில் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது. தாழ்வான பகுதியில் உள்ள பொது விநியோக கடைகளில் உள்ள அத்தியாவசியப் பொருட்களை பாதுகாப்பாக வைக்கவும் உரிய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திருமதி எம். சுதாதேவி, இ.ஆ.ப., உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திருமதி.எஸ்.மதுமதி, இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**